**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.107/2015**

**பி.வா.சா.1 – சாமியப்பன் (எ) தங்கப்பாண்டியன்**

**நாள்.18.11.2022**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் 1970ல் பிறந்தேன். நான் செந்துறை உயர்நிலை பள்ளியில் 9ஆம் வகுப்புவரை படித்து என்னுடைய படிப்பை நிறுத்தி கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. ராஜம்மாள் (3ம் பிரதிவாதி) என்னுடைய மூத்த அக்கா. அவர்கள் எந்த வருடம் பிறந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. எனக்கும் 3ம் பிரதிவாதிக்கும் இடையே எவ்வளவு வயது வித்தியாசம் என்று கேட்டால் 5 வருடம் வித்தியாசம். என் தாயார் வெளிவேலைக்கு செல்லவில்லை வீட்டில் தான் இருக்கிறார். என் தாயாரின் திருமணத்தின் போது அவரது பெற்றோர் வீட்டிலிருந்து நகை, பணம், சொத்து அது போல் சீதனம் எதுவும் கொடுத்தார்களா என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி எதுவும் படிக்கவில்லை. 3ம் பிரதிவாதிக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்ற விபரம் எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதியை என்னுடைய தாய் மாமன் 7ம் பிரதிவாதிக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டது. 7ம் பிரதிவாதிக்கு சொந்த ஊர் தேனிக்கு அருகில் உள்ள அம்மாபட்டி. 3ம் பிரதிவாதியின் திருமணத்திற்கு பிறகு மல்லமநாயக்கன்பட்டியில் எங்களுடன் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. 1976ம் வருடம் வாக்கில் 7ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதியை விட்டுவிட்டு வெளியே சென்றுவிட்டார் அப்பொழுது தான் 3ம் பிரதிவாதி எங்கள் வீட்டுக்கு வந்தார். 1976ம் வருடத்திற்கு முன்பு 3ம் பிரதிவாதி அவரது கணவருடன் தேனியில் வசித்து வந்தார். 3ம் பிரதிவாதி தன்னுடைய திருமணத்திற்கு பிறகு எவ்வளவு ஆண்டுகள் தன் கணவருடன் தேனியில் வசித்து வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதிக்கும் 7ம் பிரதிவாதிக்கும் திருமணம்மான முதல் மல்லமநாயக்கன்பட்டியில் எங்களுடன் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதி விவசாய வேலைக்கு சென்று வருவார். 3ம் பிரதிவாதிக்கு வேறு வருமானம் இருந்ததா என்று கேட்டால் வட்டிக்கு பணம் கொடுத்து வந்தார். அது யார், யாருக்கு வட்டிக்கு பணம் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. என் தந்தையார் 3ம் பிரதிவாதிக்கு கொடுத்த பணத்தைதான் அவர் வட்டிக்கு கொடுத்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல.

A - சாமியப்பன் (எ) தங்கப்பாண்டியன்

3 ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட முறையில் வருமானம் எதுவும் இல்லை எனவும், கூட்டுக் குடும்பத்திலிருந்த வந்த வருமானத்தை தான் அவர் அனுபவம் செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. 15.12.2018 ல் 3 ம் பிரதிவாதி காலமாகிவிட்டார். எனக்கு 1999 ல் திருமணம் ஆனது. என்னுடைய மனைவி தனலெட்சுமி இந்த வழக்கில் 10 ம் பிரதிவாதி. 7 முதல் 10 பிரதிவாதிகள் 3 ம் பிரதிவாதியின் வாரிசு தாரர்கள். 7 ம் பிரதிவாதி எங்கு வசிக்கிறார் என்ற விபரம் தெரியாது. 8 முதல் 10 பிரதிவாதிகள் மல்லமநாயக்கன்பட்டியில் வசித்து வருகிறார்கள். 7 ம் பிரதிவாதி மல்லமநாயக்கன்பட்டியில் தான் வசித்து வருகிறார் எனவும், அந்த விபரம் எனக்கு தெரிந்திருந்தும் வழக்கில் என்னுடன் ஒத்து போகாதகாரணத்தினால் 7 ம் பிரதிவாதி எங்கு குடியிருக்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியாது என வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 7 முதல் 10 பிரதிவாதிகளுக்கு ஒரே வழக்கறிஞர் என்று சொன்னால் சரிதான். 8 முதல் 10 பிரதிவாதிக்கும் சேர்த்துதான் நான் வழக்கை நடுத்துகிறேன். நத்தம் நீதிமன்றத்தில் OS 113/2015 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள வாதிகளுக்காக நான் தான் வழக்கை நடத்தி வருகிறேன். அந்த வழக்கில் இறந்து போன என்னுடைய சகோதரி ராஜம்மாள் (எ) பந்திபொம்முத்தாயின் வாரிசு தாரர்களை சேர்க்க நடவடிக்கை எடுத்துள்ளேன். ராஜம்மாள் (எ) பந்திபொம்முத்தாயின் வாரிசு தாரர்கள் யார் என்ற விபரம் எனக்கு தெரியாது என மேற்படி வழக்கில் என் தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தாத்தா சாமியப்பநாயக்கர் 1970 ல் காலமானார். என்னுடைய எதிர் வழக்குரையில் சாமியப்பநாயக்கர் கடந்த 25 வருடங்களுக்கு முன்பாக இறந்துவிட்டார் என நான் ஒத்துகொண்டேன் என்று சொன்னால் சரிதான். என் தாத்தா இருக்கும் வரை என் தந்தை, வாதி, 4, 5, 6 பிரதிவாதிகள் மற்றும் அவரது வாரிசு தாரர்கள் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். என் தாத்தா சாமியப்பநாயக்கருக்க ஆஸ்துமா நோய் இருந்ததாக சொல்லுவார்கள். என் தாத்தாவிற்கு ஆஸ்துமா என்பதால் அவர் வெளியே எங்கும் செல்லவில்லை எனவும், என் தந்தையார் தான் குடும்பத்தின் மூத்தவர் என்ற அடிப்படையில் சொத்துகளை பாரமரித்து வந்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தாத்தா காலமான பிறகு என் தந்தை, வாதி, பெரியமாதாநாயக்கர் ஆகியோர் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. என் தாத்தா உயிரோடு இருக்கும் காலத்தில் குடும்பத்தில் மூத்தவர் என்ற அடிப்படையில் என் தந்தையார் குடும்பத்தை நிர்வாகம் செய்து வந்தார் என்றும், அப்பொழுது கிடைத்த வருமானத்தை வைத்து என் தந்தையார் பெயரிலும், பெரியமாதாநாயக்கர் பெயரிலும் சொத்துகள் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு வாங்கப்பட்ட

அ. சாமியப்பன் (சா) தங்கப்பாண்டியன்.

சொத்துகள் அனைத்தையும் கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சொத்தை பொதுவில் வைத்து அனுபவம் செய்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. கூட்டுக் குடும்பத்திற்கு மா மரம், புளி மரம், தென்னை மரம் உள்ளது. மா மரங்கள் காய்ந்துவிட்டது. எத்தனை புளி மரங்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. கூட்டுக் குடும்பத்திற்கு 800 புளி மரம், 700 மாமரம், 600 தென்னை மரங்கள் உள்ளது என்று சொன்னால் நான் மரங்களை எண்ணி பார்க்கவில்லை. புளி மரங்களை குத்தகைக்கு விடுவது சம்மந்தமாக எனக்கும், வாதி, 6ம் பிரதிவாதிகளுக்கிடையே பிரச்சனை ஏற்பட்டு அது சம்மந்தமாக நத்தம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். தோப்புகளை தவிர புஞ்சை நிலங்கள் 20 ஏக்கர் உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தந்தையார் காலத்தில் புஞ்சை நிலத்தில் வந்த வருமானம் குடும்ப செலவிற்கு போதுமானதாக இருந்தது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தோப்புகளில் இருந்து வந்த வருமானத்தை வைத்து என் தந்தையார், என் தாயார், சகோதரி, பெரியமாதாநாயக்கர் ஆகியோர் பெயரில் சொத்துகள் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 1970ல் என் தந்தையார் எந்த சொத்துக்களிலிந்து வந்த வருமானத்தை வைத்து சொத்துகளை வாங்கினார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. என் தந்தையார் சொல்லிதான் எனக்கு தெரியும். 1972,1973,1977,1978 ஆகிய வருடங்களில் என் தந்தையார் பெயரில் வாங்கப்பட்ட சொத்துகள் அனைத்தும் கூட்டுக் குடும்ப வருமானத்தை வைத்து கூட்டுக்குடும்ப நலனுக்காக வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்துகள் வாங்கும் பொழுது எனக்கு 7 வயதுக்கு குறைவாக இருந்ததனால் அந்த சொத்துகள் எப்படி வாங்கப்பட்டது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. என் தந்தையால் பெயரில் சொத்துகள் வாங்கியிருந்தாலும் கூட்டுக் குடும்ப சொத்தாக கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் UDR திட்டத்திற்கு முன்பு உள்ள அ பதிவேட்டின் நகல் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா 4 இலக்க சொத்துகள் முழுவதும் UDR திட்டத்திற்கு முன்பு பட்டா எண். 2337 என் தந்தையார், பெரியமாதாநாயக்கர் , சின்னமாதாநாயக்கர் ஆகியோர் பெயரில் கூட்டாக இருந்தது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர்கள் அனைவரும் கூட்டாக சொத்துகளை அனுபவம் செய்து வந்ததால் கூட்டாக பட்டா உள்ளது என்று சொன்னால் சரியல்ல. UDR திட்டத்திற்கு பிறகு தவறான முறையில் பட்டா எண். 2337ல் கண்ட சில சொத்துகளை பிரித்து என் தந்தையார் பெயரில் தவறான முறையில் பட்டா ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தவறான பட்டாவை பயன்படுத்தி தவறான முறையில் நான் உரிமை கொண்டாடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

A- சாட்சி ப்ன்-மா தங்கபாண்டியன்.

என் தந்தையார் பெயரில் உள்ள கிரையபத்திரங்கள் எதையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. 26.04.1984 ல் கூட்டுக் குடும்ப வருமானத்தை கொண்டு 1ம் பிரதிவாதியின் பெயரில் சொத்துகள் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் அதற்கான கிரையப்பத்திரத்தின் நகல் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 26.04.1984 ல் 1ம் பிரதிவாதியின் பெயரில் சொத்து வாங்கப்பட்டது அதற்கான கிரைய பத்திரத்தின் நகல் வாசாஆ.14 ஆகும். அந்த சொத்து கூட்டுக் குடும்ப வருமானத்தை வைத்து வாங்கப்பட்டதால் அந்த சொத்தில் வாதி, பிரதிவாதிகள் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. 14.06.1985 1ம் பிரதிவாதி, பெரியமாதாநாயக்கர் பெயரில் 3வது இலக்க சொத்தில் 1 மற்றும் 2 வரிசை சொத்துகள் கூட்டுக் குடும்ப வருமானத்தை வைத்து கூட்டுக் குடும்ப நலனுக்காக வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 14.06.1985 1ம் பிரதிவாதி, பெரியமாதாநாயக்கர் பெயரில் சொத்து வங்கப்பட்டதற்கான கிரைய பத்திரத்தின் நகல் வாசாஆ.15. அந்த ஆவணத்தில் 1ம் பிரதிவாதி வீட்டுக் குடித்தனம் என எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரையம் ஆனது பெருமாள்நாயக்கரிடமிருந்து பெறப்பட்டது. மேற்படி சொத்தை வாதி, பிரதிவாதிகள் மற்றும் என் தாயார் கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதி சர்வே நம்பர் 1012/2B ல் கண்டுள்ள சொத்தை கிரையம் பெற்றுள்ளார். அதற்கான கிரைய பத்திரத்தின் நகல் வாசாஆ.16. அந்த பத்திரத்திலும் என் சகோதரிக்கு வீட்டுக் குடித்தனம் என குறிப்பிடப்பட்டுள்ளது என சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என் சகோதரி வீரன்செட்டியாரிடமிருந்து சர்வே நம்பர் 830/3D கண்டுள்ள சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான். அந்த சொத்து கூட்டுக் குடும்ப வருமானத்திலிருந்து வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்தை அனைவரும் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பட்டா என் தாயார் பெயரில் உள்ள பட்டாவாகும். அது வாசாஆ.17 ஆகும். என்னிடம் காட்டப்படும் பட்டா 3 ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா. அது வாசாஆ.18 ஆகும். வாசாஆ.17 மற்றும் 18 ல் குறிப்பிடப்பட்ட சொத்துகள் அனுவரும் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. புளியமரத்தை மஞ்சன் என்பவருக்கு குத்தைகைக்கு விட்டேனா என்று கேட்டால் என் தந்தையாரின் பாகமாக வந்த மரங்களை குத்தகைக்கு விட்டேன். என்னிடம் காட்டப்படும் பத்திரம் அதற்குரிய பத்திரமா என்று கேட்டால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பத்திரத்தில் என் மனைவியின் கையெப்பம் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. சொத்துகள் இன்னும் பாகபிரிவினை செய்யாமல் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

அ சாமியப்பன் த/பெ தங்கபொம்மையன்.

சொத்துகளை பொதுவில் அனுபவம் செய்து வருவதால் புளி மரங்களை என் மனைவி, வாதி, 6ம் பிரதிவாதி ஆகியோர் சேர்ந்து மஞ்சன் என்பவருக்கு குத்தகைக்கு விட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தையார் 2010ல் இறந்தார். குடல்நோய் பாதிப்பிற்காக என் தந்தையார் 6 மாத காலம் சிகிச்சை எடுத்து கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தையார் ஆஸ்துமாவுக்கு தான் சிகிச்சை எடுத்து கொண்டார். சொத்துகளை கூட்டாக தான் அனுபவம் செய்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தையார் உடல்நிலை சரியில்லாத சமயத்தில் சொத்துகளை நான் தான் பொதுவில் நிர்வாகம் செய்து வந்து கணக்குவழக்குளை பராமரித்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. பெரியமாதாநாயக்கர் நோயால் பாதிக்கப்பட்டு வீட்டிலே இருந்து இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். பெரியமாதாநாயக்கருக்கு உடல்நிலை சரியில்லாத சமயத்தில் நானும், 3ம் பிரதிவாதியும் தான் அவ்வப்போது பெரியமாதாநாயக்கரை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சொன்றோம் என்று சொன்னால் சரிதான். கூட்டுக்குடும்பத்தை நிர்வாகம் செய்து வந்ததால் தான் பெரியமாதாநாயக்கரை மருத்துவமனைக்கு நான் அழைத்து சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் பெரியமாதாநாயக்கர் என் பெயரில் எழுதி வைத்த கிரையபத்திரத்தின் நகல். அது வாசாஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டது. அந்த ஆவணம் பதிவு செய்ய சார்பதிவாளர் பெரியமாதாநாயக்கர் வீட்டிற்கு அழைத்து வரப்பட்டார் என்று சொன்னால் சரியல்ல. பெரியமாதாநாயக்கர் வெளியே நடமாடமுடியாத நிலையில் இருந்த போது சார்பதிவாளரை வீட்டிற்கு வரவழைத்து மோசடியாக வாசாஆ.12 ஆவணம் ஏற்படுத்தி சொத்தை எழுதி வாங்கிகொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் 7ம் பிரதிவாதியும், அவருடைய மனைவியும் சாட்சி கையெப்பம் போட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி கிரைய பத்திரம் எழுதி கொடுக்கப்பட்ட உடனே நானும், என் தாயார் 1ம் பிரதிவாதியும், 3ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்தோம் என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணம் வாசாஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டது. வாசாஆ.12 ஆவணத்தை எழுதி கொடுக்க பெரியமாதாநாயக்கருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ.12ன்படி எவ்வளவு தொகைக்கு கிரையம் ஏற்பட்டது என்று சொன்னால் ஞாபகம் இல்லை. தற்போது சாட்சி ரூ.1லட்சம் என கூறுகிறார். மேற்படி ஆவணம் மோசடியான ஆவணம் என்பதால் அதற்கு பெரியமாதாநாயக்கருக்கு பணம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ.12ல் கிரைய மதிப்பு ரூ.2,50,000/- என குறிப்பிடப்பட்டுள்ளது. வாசாஆ.13ன்படி செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைக்க எனக்கும், என் தாயாருக்கும் உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல.

A. சாமயப்பன் த/பெ தங்கப்பாண்டியன்.

தாவா 6 வது இலக்க சொத்திற்கு வாதி, 1 ம் பிரதிவாதி, பெரியமாதாநாயக்கர், 2 ம் பிரதிவாதி ஆகியோர் பெயரில் கூட்டாக பட்டா பதிவாகியுள்ளது என்று சொன்னால் சரிதான். எந்த அடிப்படையில் கூட்டுப்பட்டா ஆனது என்று சொன்னால் சொத்தை வாங்குவதற்கு பணம் கொடுத்தார்கள். அந்த சொத்து எந்த வருடம், யார்,யாரிடமிருந்து வாங்கப்பட்டது என்று கேட்டால் மூக்கன், சுகந்திரம், தங்கவேலு ஆகியோரிடமிருந்து வாங்கப்பட்டது. எந்த வருடம் வாங்கப்பட்டது என்று ஞாபகம் இல்லை. கூட்டுக் குடும்ப வருமானத்தை வைத்து வாதி, 1 ம் பிரதிவாதி, பெரியமாதாநாயக்கர் மற்றும் என் பெயரில் அந்த சொத்து கூட்டாக வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்து கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம் என்று சொன்னால் தரிசாக தான் உள்ளது. அந்த சொத்து நாங்கள் கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம் என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வாசாஆ.7 ன்படி வக்கீல் நோட்டீஸ் அனுப்பி உள்ளேன். அதில் என் தந்தையார் என்ன தொழில் செய்து வந்தார் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை. வாதி பாகப்பிரிவினை வேண்டி வக்கீல் நோட்டீஸ் அனுப்பினார். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு வந்த பிறகு நத்தம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரிதான். நான் சொன்னது போல் என் தந்தையார் கமிஷன் தொழில் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மா, புளி, தென்னை, புஞ்சை ஆகிய மகசூலை குடும்பத்தின் மேலாளர் என்ற அடிப்படையில் என் தந்தையார் விற்று வந்தார் என்று சொன்னால் சரியல்ல. பெரியமாதாநாயக்கருக்கு எந்தவித வருமானம் மற்றும் தொழில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா 8 வது இலக்க சொத்தில் குச்சி வீடு , ஒரு மாடிவீடு உள்ளது. அந்த வீட்டில் தான் நான் குடியிருந்து வருகிறேன். 9 வது இலக்க சொத்தில் ஒரு வீடு கட்டப்பட்டுள்ளது. அந்த வீடு கூட்டுக் குடும்ப வருமானத்தை வைத்து கட்டப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த வீட்டில் 3 ம் பிரதிவாதியும், அவருடைய வாரிசு தாரர்களும் வசித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதியை கூட்டுக் குடும்பத்திலிருந்து விரட்டிவிட்டதால் அவர் தன் மகனுடன் மகன் வருமானத்தை வைத்து தனியாக வீடுகட்டி வசித்து வருகிறார் என்று சொன்னால் நாங்கள் குடும்பத்தைவிட்டு விரட்டவில்லை. கூட்டுக் குடும்பமாக இருந்த பொழுது 100 பவுன் நகையை என் தந்தையார் வைத்திருந்தார் எனவும், என் தந்தையார் காலமான பிறகு அது என் கைவசம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. என் தந்தையார் இறக்கும் பொழுது ரூ.4 லட்சம் கூட்டுக் குடும்ப பணமாக வைத்திருந்தார் எனவும், அது என்னிடம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. என் தந்தையாராருக்கு பிறகு கூட்டுக் குடும்ப சொத்துகளை நான் நிர்வாகம் செய்துவரும் வகையில் அதில்

A. அாமையப்பன் ஒப் தங்கப்பாண்டியன்

கிடைத்த வருமானம் ரூ.15 லட்சம் வரை என்னிடம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரிம் கிடைக்கதக்கது என்று சொன்னால் சரியல்ல. தாவாபடி தீர்ப்பு அளிக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

Taken down by me in open court [illegible] correct [illegible] true [illegible] Made by the [illegible]

Addl. District & Sessions Judge, Dindigul.